1972 ஏப்ரல் 3]

சென்னை அசோக் நகருக்கும், பூவிருந்தவல்லிச் சாலைக்கும் இடையே இணைப்புச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

சுகநதியின் குறுக்கே சிறு அணை.

*** 857 வினா—திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காட்டில் உள்ள வந்தவாசி நகருக்கு அருகில் ஓடும் சுகநதியின் குறுக்கே ஒரு சிறு அணைகட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உல்லாசப் பயணிகள் தங்குமிடங்கள்.

* 858 வினா—திரு. வி. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில், " உலக்கை அருவி " " திற்பரப்பு அருவி " " முத்துக்குழி வயல் " போன்ற வனப் பிரதேசங்களையும், கன்னியாகுமரி நகர் போன்ற இடங்களையும் உல்லாசப் பிரயாணிகள் தங்குமிடமாக்குவதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்புள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கன்னியாகுமரி நகர் ஏற்கனவே உல்லாசப் பயணிகள் தங்குமிடமாக இருந்து வருகிறது. ஆனால் குமரி மாவட்டத்திலுள்ள " உலக்கை அருவி " " திற்பரப்பு அருவி " " முத்துக்குழி வயல்" போன்ற வனப் பிரதேசங்களை உல்லாசப் பயணிகள் தங்குமிடமாவதற்குரிய செயற் குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.